**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

**O.S. No. 266/2022**

Deposition of **P.W. 1**

Name of the Witness: திருமதி.சுபத்ரா

Date **: 30.01.2024.**

***குறுக்கு விசாரணை***

**1.** நான் இந்த வழக்கில் 2 வது வாதி. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு நன்றாக தெரியும். என் அம்மா விசாலாட்சி பிரதிவாதிக்கு 19.08.2016 ம் தேதி பதிவு செய்யப்பட்ட கிரைய ஒப்பந்தம் எழுதி கொடுத்த விவரம் எனக்கு தெரியும். மேற்படி தாவா சொத்தானது என் அம்மா விசாலாட்சிக்கு 27.12.1973 தேதியிட்ட ஆவண எண்.1753/73 பாத்தியப்பட்டது என்றால் சரிதான். என் அம்மா விபத்து ஏற்பட்டு 28.02.2018 ல் இறந்து விட்டார் என்றால் சரிதான். என் தாயார் இறந்த பின்பு வாதிகளாகிய நாங்கள் தான் தாவா சொத்தை அனுபவித்து வருகிறோம். பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்து எதுவும் போடவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகளிடம் ஒப்பந்தம் போடும்போது என் அம்மா எவ்வளவு பணம் முன் பணமாக வாங்கினார் என்று எனக்கு தெரியும். அன்றைய கிரைய ஒப்பந்த தேதியில் ரூ.80,000/- முன்பணமாக வாங்கினார். பிரதிவாதி கிரைய ஒப்பந்தம் படி

நடந்து கொள்ளவில்லை என்று நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்தம் எந்த அடிப்படையில் காலாவதியாகிவிட்டது என்று நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல.

2. பிரதிவாதிகளுக்கு 24.11.2022 ல் சட்ட அறிவிப்பு அனுப்பியதாக சொன்ன விவரம் பிரதிவாதிக்கு தெரியாது என்றால் சரியல்ல. நான் சட்ட அறிவிப்பை அனுப்பாமல், அனுப்பியது போல மோசடியான ஆவணம் தயார் செய்தேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு அவ்வாறு சட்டஅறிவிப்பு அனுப்பி இருந்தால் பிரதிவாதி உண்மை சங்கதிகளை தெரிவித்து, பதில் அறிவிப்பு அனுப்பி உண்மை சங்கதிகளை சொல்லி நீதிமன்றத்தில் வழக்கு போட்டிருப்பார் என்றால் சரியல்ல. அதுபோல அவரை செய்யவிடாமல் தடுப்பதற்காகா அவருக்கு சட்ட அறிவிப்பு அனுப்பியதாக பொய்யாக ஆவணங்களை தயாரித்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சட்ட அறிவிப்பிய பிறகு, எந்த தேதியில் பிரதிவாதியிடம் சென்று கிரைய ஒப்பந்தத்தை ரத்து செய்ய கேட்டேன் என்று எனக்கு ஞாபகமில்லை. நான் பிரதிவாதியிடம் சென்று அதுபோல கேட்கவே இல்லை என்றாலும், அதுபோல கேட்டிருந்தபால் அவர் நீதிமன்றத்தை அணுகி பரிகாரம் கேட்டிருப்பான் என்றால் சரியல்ல.

3. பிரதிவாதிக்கு கிரைய ஒப்பந்தம் எழுதி கொடுப்பதற்கு முன்பாக என் அம்மா கோபால் ஆச்சாரிக்கு 02.11.1974 ல் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்து சேலம் - அரூர் மெயின் ரோட்டில் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து நெடுஞ்சாலை துறையால் நான்கு வழி சாலையாக

விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிக்கு கிரைய ஒபபந்தம் எழுதி கொடுத்த நிலத்தை அரசாங்கம் 20 செண்ட் கையகப்படுத்திவிட்டது என்றால் சரியல்ல 13 செண்ட் தான் கையகப்படுத்தியது. தாவா சொத்தில் சுங்க சாவடி அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் 36 செண்ட் நிலத்தில், 20 செண்ட் எடுத்தது போக மீதி 16 செண்ட்தான் உள்ளது என்றால், அரசாங்கம் 13 செண்ட்தான் கையகப்படுத்தியது. பிரதிவாதி எங்களிடம் வந்து அரசு எடுத்து கொண்டது 20 செண்ட் போக மீதி உள்ள நிலத்தை கிரையம் செய்து கொடுக்க பலமுறை கேட்டார் என்றால் சரியல்ல. வாதிகளிடமும் எங்களின் சகோதரர் ரவி என்பவரிடமும் பிரதிவாதி பலமுறை வந்து கிரையம் செய்து கொடுக்க சொல்லி கேட்டார் என்றாலும, ஆனால் நாங்கள் சாக்கு போக்கு சொல்லி காலம் கடத்தினோம் என்றால் சரியல்ல. என்னுடைய சகோதரர் ரவி 25.01.2019 தினபூமி நாளிதழில் அசல் ஆவணம் தொலைந்துவிட்டதாக விளம்பரம் செய்தார் என்றால் எனக்கு தெரியாது அசல் கிரைய ஆவணம் எங்களிடத்தில் உள்ளது.

4. பிரதிவாதிக்கு தாவா ஒப்பந்தம் போடுவதற்கு முன்பாகவே, எருமியாம்பட்டியை சேர்ந்த நடேசன் என்பவருக்கு 19.03.2014 ல் தாவா சொத்தை கிரையம் செய்வதாக ஒப்புக்கொண்டு 1 செண்ட் 1 லட்சத்து ஐயாயிரம் ருபாய்க்கு விலை பேசி முன்பணமாக ரூபாய் 5 ஆயிரம் பெற்றுக்கொண்டார் என்றால் சரியல்ல. அதுபோல எதுவும் நடக்கவில்லை. நடேசனுக்கு எழுதிகொடுத்த கிரைய ஒப்பந்தத்தை மறைத்து பிரதிவாதிக்கு

கிரைய ஒப்பந்தம் எழுதி கொடுத்து பிறகு பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த பதிவு செய்யப்பட்ட கிரைய ஒப்பந்தத்தை மறைத்து, 03.03.2019 ல் ராமசாமிக்கு பொது அதிகார பத்திரம் எழுதி கொடுத்தார் என்றால் சரியல்ல. அந்த பதிவு செய்ய முற்பட்ட போது பிரதிவாதி அதை தெரிந்து கொண்டு ஊர் பெரியவர்களை அழைத்து வந்து சார் பதிவாளர் அலுவலகத்தில் பொது அதிகார பத்திரத்தை ரத்து செய்யாமல் தடுத்து விட்டார் என்றால் சரியல்ல. நாங்கள் இதுபோல தவறு செய்யமாட்டோம் என்று சொல்லி அசல் கிரைய பத்திரம் கிடைத்தவுடன் கிரையம் செய்து கொடுப்பதாக ஒப்புக்கொண்டு ராமசாமி பெயரில் எழுதி கொடுத்த பொது அதிகார பத்திரத்தின் அசலை பிரதிவாதியிடம் கொடுத்தோம் என்றால் சரியல்ல.

5. நடேசனிடமும் எழுதி கொடுத்த கிரைய ஒப்பந்த பத்திரத்தில் பணத்தை பெற்றுக்கொண்டு தேதி வாரியாக நானும் வாதிகளாகிய சகோதரரும் கையெழுத்து போட்டிருக்கிறோம் என்றால் சரியல்ல. நடேசனுக்கு என்னுடைய சகோதர 08.10.2016 ம் ஆண்டு 10 ஆயிரம் ரூபாய் பெற்றுக்கொண்டு வரவு வைத்து கொடுத்திருக்கிறார் என்றாலும், என் தாயார் விசாலாட்சியும், நாங்களும் 30 ஆயிரம் பெற்றுகொண்டு வரவு வைத்து கொடுத்திருக்கிறார் என்றாலும், எங்களது தாயார் ரவி 50 ஆயிரம் பெற்றுகொண்டு வரவு வைத்து கொடுத்திருக்கிறார் என்றால் சரியல்ல. 24.12.2016 அன்று என் அம்மா விசாலாட்சியும் சகோரர் ரவி 20 ஆயிரமும், 07.03.2017 ல் 40 ஆயிரமும் பெற்றுகொண்டு வரவு வைத்து கொடுத்திருக்கிறார் என்றால் சரியல்ல. பின்னர் 04.06.2017 ல் என்னுடைய

சகோதரர் ரவி 10 ஆயிரம், 14.10.2017 அன்று 50 ஆயிரமும், 10.05.2018 அன்று 50 ஆயிரமும், 16.06.2018 அன்று 1 லட்சமும், 03.09.2018 அன்று 1 லட்சமும், 29.10.2018 ம் தேதி 50 ஆயிரமும், 25.03.2022 ல் 15 ஆயிரமும், 14.07.2022 ல் 2 லட்சமும், 24.09.2019 ல் 50 ஆயிரமும், 30.01.2020 ல் 18 ஆயிரமும், 21.07.2020 ல் 15 ஆயிரமும், 27.08.2020 ல் 1 லட்சமும், 27.11.2020 ல் 1 லட்சமும், 19.02.2021 ல் 50 ஆயிரமும், 30.12.2021 40 ஆயிரமும், 03.05.2022 ல் 50 ஆயிரமும் ஆக மொத்தம் 18 லட்சம் ரூபாய் வாதிகளும், என்னுடைய சகோதரர் ரவியும் பெற்றுக்கொண்டு பத்திரத்தில் கையெழுத்து போட்டுள்ளோம் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**